09.01.2026 பி.வா.சா.2 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை . (ஒ.எஸ்.எண்.178/2017 ) திருமதி.கோமதியம்மாள்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை-</u>

1) வழக்கின் பிரதிவாதி எனது தந்தை என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் தரப்பினர் கிடையாது என்றால சரிதான். நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிப்பதற்கு சாட்சி அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள முதல்விசாரணை வாக்குமூலத்தில் பாரா 3 ல் எனது தகப்பனார் தாவா கிராமத்தில் சர்வே எண்.46/4 லட்டரில் 1 ஏக்கர் 6 செண்டு நிலத்தில் வடமேல் முனையில் உள்ள 16 செண்டு நிலத்தை கடந்த 04.12.1978 ம்தேதியிட்ட கிரைய ஆவண எண்.1186/1978 ஆவணம் மூலம் வாதியின் தாத்தாவான மாடன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் தங்கவேல் இந்த வழக்கில் முன்னிலையாகி எதிர்வழக்குரை தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். எனது தகப்பனார் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை பாரா 5 ல் பிரதிவாதியின் பாட்டனார் மாடன் என்பார் இந்த பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்த 16 செண்ட் நிலம் நீக்கி மீதமுள்ள பகுதி மேற்படி மாடன் வசம் கையிருப்பாக இருந்து அதை வாரிசு நிலைமையில் அவரது மகன் பழனி அனுபவித்து வந்தார் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். அதில் குறிப்பிட்டுள்ள பழனி என்பவர் இந்த வழக்கின் வாதியின் தந்தை என்றால் சரிதான். எனது தகப்பனார் கிரையம் பெற்ற 16 செண்டில் மேல்புறம் செண்டு 10 ஐ நான் கிரையம்பெற்றுள்ளேன் என்றால் சரிதான். எனக்குகிரையம் கொடுத்தது போக மீதமுள்ள 6 செண்டு தான் எனது தகப்பனாருக்கு பாத்தியம் என்றால் சரிதான். எனது தகப்பனார் 08.04.2017 ல் ஆழ்துளை கிணறு அமைத்த சொத்தானது எனது தகப்பனார் கைவசமுள்ள 6 செண்டுக்கு தென்பக்கம் என்றால் இல்லை 6 செண்டுக்குள் தான்அமைத்துள்ளார்.

2) ஆழ்துளை கிணறு அமைத்த இடம் எனது தகப்பனாருக்குரிய 6 செண்டுக்குள் அமைக்கப்படவில்லை என்றும் அதற்கு தெற்கே உள்ள வாதியின் இடத்தில அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளாரா என்றால் இல்லை வீட்டில் இருக்கிறார். முதல்விசாரணைக்கான விவரங்கள் அனைத்தும் எனது வழக்கறிஞருக்கு நான் தான் கூறினேன். எனது நிருபண வாக்குமூலம் பக்கம் 3 ல் எனது தகப்பனார் இறந்தபின்பு மேற்படி உயில் ஊர்ஜிதத்திற்கு வந்தது என்றுசொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நீதிமன்றத்தில் பொய்யான நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, வார்த்தை தவறு ஏற்பட்டுள்ளது எனது தந்தை உயிருடன் தான் இருந்து வருகிறார். எனது தகப்பனார் எனக்கு விற்பனை செய்த 10 செண்டு போக எனது தந்தைக்கு 6 செண்டு மட்டுமே பாத்தியம் என்றால் சரிதான்.6 செண்டு போக சர்வே எண்.46/4 ல் வேறு எவ்வித பாத்தியமும் கிடையாது என்றால் சரிதான். எனக்கு எனது தகப்பனார் விற்பனை செய்த 10 செண்டு தனியாக உட்பிரிவு ஆகி பட்டா பெற்றுள்ளேன் என்றால் உட்பிரிவு ஆகிவிட்டது பட்டா நான் வாங்கவில்லை. இந்த வழக்கு எனது தகப்பனாருக்குப் பாத்தியப்பட்ட 6 செண்டு நிலத்திற்கு போடப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் எனது சகோதரிகளை சேர்க்க வேண்டுமென்று கூறுவது சரியல்ல என்றால் தவறு. பழனி உடன் பிறந்தவர்களை இந்த வழக்கில் சேர்க்க வேண்டுமென்று சொல்லுவது தவறு என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு அனுமதிக்க வேண்டுமென்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
09.01.2026.